கரூர் மருத்துவமனையில் துணை முதல்வர் கண்ணீர் அஞ்சலி - ஆறுதல்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.9.2025) கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று, கரூரில் நடைபெற்ற தமிழக வெற்றிக் கழகத்தின் அரசியல் பரப்புரைக் கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடலுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், மா. சுப்பிரமணியன் எஸ்.எஸ், சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி செ.ஜோதிமணி, கே.என்.அருண்நேரு, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மீ.தங்கவேல், (கரூர்), மாவட்ட ஆட்சித் தலைவர் வே. சரவணன், (திருச்சிராப்பள்ளி), மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், (திண்டுக்கல்) அரசு உயர் அலுவலர்கள், அரசு மருத்துவர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

யோகேஸ்வரி மணிமாறன் தலைமை!

மயிலம் ஒன்றியத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

மைலம், செப்.29-

மயிலம் ஒன்றியம்செண்டூர்,பெலா குப்பம், புலியனூர், அவ்வையார் குப்பம் ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மைலம் ஊராட்சி ஒன்றியம் செண்டூர், புலியனூர், பெலாக்குப்பம், அவ்வையார் குப்பம் ஆகிய ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நடைபெற்றது.

மைலம்ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார் ஊராட்சி மன்ற தலைவர்கள் செண்டூர் முருகன், பெலா குப்பம் பூங்கா பாக்கியராஜ், புலியனூர் அண்ணாமலை, அவ்வையார்குப்பம்மகாலட்சுமி கமலக்கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அனைத்து துறை சார்பில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்துஅதிகாரிகளி டம் கேட்டறிந்தார்.

தொடர்ந்துமக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவ துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தனையும்,ரத்த அழுத்தம்,நீரழிவு நோய், சர்க்கரை,நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துமாத்திரை பெட்டகத்தினையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.

முகாமில் செண்டூர், கொல்லியங்குணம்,விளங்கம்பாடி, சின்ன நெற்குணம், பெலா குப்பம் ,பெரமண்டூர், புலியனூர், தனியல், அவ்வையார்குப்பம், ஆலகிராமம், டி. கேணிப் பட்டுஆகிய கிராமங்களிலிருந்துஏராளமான பொதுமக்கள் வருகை தந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி,சேது நாதன்,மாநிலத் திருமண குழு உறுப்பினர் செஞ்சி சிவா,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள்மணிமாறன், செழியன,ஒன்றிய துணைச் சேர்மன் புனிதராமஜெயம்மாவட்ட கவுன்சிலர்கள்விஜயன், மகேஸ்வரி குமரேசன், ஒன்றிய கவுன்சிலர்கள்நிவேதிதா , சாந்தகுமார். சரசு முருகன், கோமதி, ஜெயந்தி சேகர், கண்ணன் ஊராட்சி மன்ற தலைவர்கள்,ஜோதிலட்சுமி, உத்திரமணி, கைலாஷ்,மகேஷ்பாலமுருகன்,இந்திரா சுரேஷ், புவனேஸ்வரி ஜெயச்சந்திரன்,ஒன்றிய ஊராட்சிக் கழக திமுக நிர்வாகிகள் ராஜா, நாராயணன், காந்தி, அர்ஜுனன், விஜயன், ரவி, பழனிவேல், கோவிந்தம்மாள், சண்முகம், அண்ணாதுரை, சேகர், ஞானசேகர், சிவானந்தம், தீவனூர் சேகர், சம்சுதீன், பாஸ்கர், பிரபு, அன்பு, சேகர்.ரமேஷ், வேல்முருகன், சிவக்குமார், நடராஜன், குணசேகர். சக்திவேல், விஜயகுமார் ,கலியமூர்த்தி, முனியாண்டி, உள்ளிட்டதுறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் புலியனூர்,அவ்வையார்குப்பம் ஆகிய ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாமில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல் ஏ,தொடங்கி வைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்துடன் கூடிய நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன்,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர்,ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், ஒன்றிய செயலாளர் மணிமாறன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவக்குமார், இளங்கோவன் உள்ளிட்டநிர்வாகிகள்,துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

கழக வாக்குச் சாவடி முகவர்கள் போர் வீரர்களைப் போன்று களப் பணியாற்ற வேண்டும்

வெற்றி என்பதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்!

திருச்சி சிவா எம்.பி. பேச்சு!

திண்டுக்கல், செப். 29-

திண்டுக்கல் சட்டப் பேரவைத் தொகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தனியார் அரங்கில் நடைபெற்ற இந்த கூட்டத்துக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளரும், அமைச்சருமான அர. சக்கரபாணி தலைமை வகித்தார். கிழக்கு மாவட்டச்செயலாளரும், பழனி சட்டப் பேரவை உறுப்பினருமான இ.பெ. செந்தில்குமார் அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக திண்டுக்கல் தொகுதி தேர்தல் பொறுப்பாளரும், மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா எம்பி கலந்து கொண்டு பேசியதாவது:

கழக வாக்குச் சாவடி முகவர்கள் போர் வீரர்களைப் போன்று களப் பணியாற்ற வேண்டும். இயக்கத்தை வெற்றி பெற வைப்பது மட்டுமே ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். இப்போது முதல் தேர்தல் முடியும் வரை அனைவரும் தீவிரமாக களப்பணியாற்ற வேண்டும் என்றார்.

இதில் அமைச்சர் அர. சக்கர பாணி பேசியதாவது: மாவட் டத்திலேயே அதிக பட்சமாக திண்டுக்கல் தொகுதியில்தான் ஒரு லட்சத்து 7 ஆயிரம் வாக்காளர்கள் கண்டறியப்படாமல் உள்ளனர். பெயர்கள் பட்டியலில் இருந்தாலும், குறிப்பிட்ட விலாசத்தில் அவர்கள் இல்லை. இவர்களில் பலர் விலாசம் மாறியும், சிலர் ஊர் மாறியும் சென்று விட்டனர். ஆனால், வாக்காளர் பட்டியலில் இருந்து அவர்களது பெயர்கள் நீக்கப்படவில்லை. இதனால், அவர்கள் தற்போது இருக்கும் தொகுதியில் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தால், இரட்டை வாக்குப் பதிவு நடக்க வாய்ப்புள்ளது.

எனவே, வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளின்போது அனைவரும் கவனமாக இருந்து, வாக்காளர்களை பட்டியலில் சரி பார்க்க வேண்டும். இரட்டை வாக்குப் பதிவுகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

திண்டுக்கல் தொகுதியில் உள்ள 7 தொகுதிகளிலும் வெற்றிவாகை சூட வேண்டும். இந்த முறை கண்டிப்பாக திண்டுக்கல் தொகுதியில் நாம் வெற்றி பெறவேண்டும் என்றார்.

கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார்பேசுகையில், 'திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அத்தனை தொகுதியையும் வென்றெடுத்து தலைவரிடம் கொண்டுசேர்க்கும் கடமை உங்களுக்கு இருப்பது போல் பொறுப்பாளரான எனக்கும் உண்டு. எனவே, இந்த தேர்தலில் வெற்றி பெறவேண்டியது அவசியம் என்றார்.

தேனி மாவட்டம் நிகழ்ச்சியினை மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மீன்வள மேம்பாட்டு திட்டம் 2020-2026 சுருளி ஆறு வைகைஆற்றில் நாட்டினமீன் குஞ்சுகள் இருப்பு செய்தல்மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங். தொடங்கி வைத்தார். உடன் மாநில மீனவர் நல வாரிய உறுப்பினர் குள்ளபுரம் முருகன் வீரபாண்டி பேரூராட்சி தலைவர் கீதா சசி, பெரியார் வைகைவடிநில உபகோட்டம் உத்தமபாளையம் உதவி செயற்பொறியாளர் மயில்வாகணன் பேரூராட்சி செயல் அலுவலர் கணேசன், கிளர்க் வாசிமலை மற்றும் அரசு அதிகாரிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.